NUS National University of Singapore

Source: *Tamil Murasu*, p2
Date: 24 September 2017

400க்கும் மேற்பட்டோருக்கு சிண்டாவின் உன்னத விருதுகள்

வில்சன் சைலஸ்



துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்னத்துடன் உரையாடும் வென்னிஷா சேவியர் (வலது). அவர்களுக்குப் பின்னால் சிண்டாவின் உன்னத விருதுகளைப் பெற்ற மாணவர்கள் விக்ரம் ரவிச்சந்தர், வைஷ்ணவி லட்சுமணன்

படம்: திமத்தி டேவிட்

மனதுக்கு விரும்பிய ஒன்றில் முழு கவனத்தையும் செலுத்தினால் வெற்றிக்கான பாதைகளைக் எப்படியும் கண்டறியலாம் என்பதை நிரூபித்துள்ளார் 25 வயது வென்னிஷா சேவியர். 'ஏ' நிலை தேர்வில் போதுமான மதிப்பெண்கள் பெறாத இவர், தேசிய பல்கலைக்கழகச் சட்ட துறையின் முதலாம் ஆண்டு மாணவி.

ஆர்வம் நிறைந்த துறைக்குச் செல்ல தொடக்கக் கல்லூரி பாதை இவருக்குக் கைகொடுக்கவில்லை. மாற்று வழியைத் தேர்ந்தெடுத்து தமது குறிக்கோளை எட்டினார் வென்னிஷா.

சீடார் பெண்கள் பள்ளியில் சிறப்பாக தேர்ச்சி பெற்று தேசிய தொடக்கக் கல்லூரிக்குச் சென்ற வென்னிஷாவின் 'ஏ' நிலை தேர்வு முடிவுகள் சட்ட துறைக்குச் செல்ல போதுமானவையாக இல்லை.

தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அவர் பகுதிநேர ஆசிரியராகவும் துணைப்பாட வகுப்பு ஆசிரியராகவும் பணியாற்றினார் வென்னிஷா. தம்மிடமிருந்து ஊக்கம் பெற்ற மாணவர்களைப் பார்த்துதான் தமது கல்வியைத் தொடர ஊக்கம் பெற்றார் அவர்.

பலதுறை தொழிற்கல்லூரியில் சட்ட நிர்வாக துறைக்குச் சார்ந்த படிப்பு இருப்பதை அறிந்த அவர் வழக்கறிஞராக இது ஒரு வழி என்பதை வென்னிஷா தெரிந்து கொண்டார். தெமாசெக் பலதுறைத் தொழிற்கல்லூரியில் 2014ஆம் ஆண்டு சேர்ந்து வெற்றிகரமாக கல்வியை முடித்து சட்டத் துறையில் பட்டயக் கல்வியை மேற்கொண்டார். சிண்டாவின் உ உன்னத விருதை முதன்முறையாக பெற்ற இவர், தமக்குப் பிடித்தமான துறையில் கால் வைக்க இந்த விருது ஊக்குவிக்கிறது என்றார்.

சிங்கப்பூர் பள்ளி விளையாட்டு மன்றத்தின் சிறப்பு தேசிய 'கலர்ஸ்' விருதைப் பெற்றார் தடகள வீரர் திருபன் தனராஜன், 16. காற்பந்தாட்டத்தின் மீது அதீத ஆர்வம் கொண்ட இவருக்கு தேசிய தொடக்கக் கல்லூரியில் காற்பந்தாட்டத் துறை இல்லாதது சற்று ஏமாற்றம் அளித்தது. இருப்பினும், விளையாட்டுத் துறையில் இருக்க நினைத்த அவர், தடகளத்தில் இணைந்து கொண்டார். தேசிய தொடக்கக் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயிலும் இவர், கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற சிங்கப்பூர் தடகள வெற்றியாளர் போட்டியின் 400 மீட்டர் பந்தயத்தில் கலந்து கொண்டு 32 ஆண்டு சாதனையை முறியடித்தார்.

இத்துடன், இரண்டு மாதங்களுக்கு முன் 18 வயதுக்குக் கீழானவர்களுக்காக கென்யாவில் நடைபெற்ற உலக வெற்றியாளர் போட்டியின் 400 மீட்டர் பந்தயத்தில் கலந்துகொண்டு புது சாதனையைப் படைத்தார் இந்த இளையர். சிண்டாவின் உன்னத விருதுகள் விளையாட்டுகளில் ஆர்வமுள்ளவர்களுக்கும் வழங்கப்படுவது வரவேற்கத்தக்கது என்று கூறிய திருபன், படிப்பையும் பயிற்சிகளையு ஒரு சேர பார்த்துக்கொள்வதற்கு பெற்றோர் அதிகளவில் துணை புரிந்தனர் என்றார்.

"உடல் வலியைப் போக்க அவ்வப்போது தந்தை கை கால்களைப் பிடித்துவிடுவார். ஆரோக்கியத்தில் அக்கறையுள்ள தாய் ஆரோக்கிய முறையில் உணவுகள் தயாரித்துக் கொடுப்பார்," எனப் பெற்றோரின் கவனிப்பு குறித்து பகிர்ந்துகொண்டார் திருபன்.

பலதரப்பட்ட பிரிவுகளில் 485 மாணவர்கள் நேற்று சிண்டாவின் உன்னத விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். அவர்களுள், லாசெல் கல்லூரியின் கலைத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்ற ஜி. பிரமிளா, ராஜேஸ்வரி விக்ரமன் ஆகியோரும் அடங்குவர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.